අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/10/06/(II)
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.01

அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும்,

<u>பாடசாலையினுள் வகுப்பு வட்டக் கூட்டங்களை நடாத்துதல் தொடர்பான வழிகாட்டல்</u>

கற்றல் கற்பித்தல் செயன்முறையினை மிகவும் சிறந்த மட்டத்தில் பேணுவதற்காகவும் பாடசாலைக் கல்வியின் பண்புத் தரத்தை விருத்தி செய்வதற்காகவும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடையே ஆளிடைத் தொடர்புகளை வலுவூட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு பாடசாலைகளில் வகுப்பு வட்டக் கூட்டங்களை நடாத்துவதற்கான ஆலோசனைகள் 2023.12.29ம் திகதி மற்றும் 54/2023 இலக்கம் உடைய சுற்றுநிருபத்தின் 4.7ம் பந்தியினூடாக வழங்கப்பட்டுள்ளன. குறித்த ஆலோசனைகளுக்கு அமைய பாடசாலைகளில் வகுப்பு வட்டக் கூட்டங்களை நடாத்தும் போது கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி பெற்றோரையும் அது தொடர்பாக அறியப்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. வகுப்பு வட்டக் கூட்டங்களின் போது எவரேனும் ஒரு மாணவரை அல்லது பெற்றாரை பிரிதொரு மாணவர் அல்லது பெற்றோரின் முன்னிலையில் எந்தவொரு வகையிலும் அசௌகரியத்திற்கோ அல்லது அவமானத்திற்கோ உட்படுத்தாதிருப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

2. வகுப்பு வட்டக் கூட்டங்களின் போது பெற்றோர் மற்றும் மாணவர்களை அவசியமற்ற வகையில் அழுத்தம் ஏற்படுத்தக் கூடிய நிதி சேகரிப்புக்களிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

3. வகுப்பு வட்டக் கூட்டங்களை நடாத்துவதற்காக தெரிவுசெய்யப்படும் நேரம், பெற்றோரின் கடமைச் செயற்பாடுகளுக்கு ஆகக் குறைந்தளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் வசதிக்கு அமைய நடாத்துதல் வேண்டும் என்பதுடன் அரச அலுவலகங்களின் பொது மக்கள் தினமான திங்கட் கிழமைகளை இதற்காக பயன்படுத்தாதிருத்தல்.

4. வருடத்தில் முதலாம் தவணை ஆரம்பம் மற்றும் இறுதியில், இரண்டாம் தவணை மற்றும் மூன்றாம் தவணையின் இறுதியில், என்பதாக வருடம் ஒன்றில் ஆகக் குறைந்தது 4 வகுப்பு வட்டக் கூட்டங்களையேனும் கட்டாயமாக நடாத்த வேண்டும் என்பதுடன், வருடாந்தம் வகுப்பு வட்டக் கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் பாடசாலை நாட்காட்டி தொடர்பாக குறித்த வருடத்தின் ஆரம்பத்திலேயே பெற்றோரை அறியப்படுத்த வேண்டும்.

5. இல. 35/2023 சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடசாலை வளாகத்தினை புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள், மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் எவையும் இன்றிய வலயமாக்குவதற்காக "பாடசாலை நட்புக் கழகங்களை" நிறுவுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் தற்போது கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் இணைந்ததாக வீடுகள் மற்றும் அதனுடன் சார்ந்த சூழல்களிலும் சிகரட், புகையிலை சார் உற்பத்திப் பொருட்கள், மதுபானங்கள், போதைப் பொருட்கள் மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் எவையும் இல்லாத வகையில் நடாத்திச் செல்வதன் முக்கியத்துவம் தொடர்பாக அறியப்படுத்துதல்.

6. சுகாதாரத் துறையின் பொருத்தமான உத்தியோகத்தர்களது வளப் பங்களிப்பினை தேவையான வகையில் பெற்று மாணவர்களது தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல், போக்குவரத்து முறைகளைப்

பயன்படுத்தும் போதும் பயணங்களை மேற்கொள்ளும் போதும் பாதுகாப்பாக செயற்படல், பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பாக தமது பிள்ளைகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குதல் தொடர்பாக பெற்றோரை அறியப்படுத்துதல்.

7. மாணவர்களது முன்னேற்றம், பாடசாலை வரவு, இணைப் பாடவிதானம் மற்றும் விளையாட்டில் பங்கேற்பினை மேம்படுத்தக்கூடிய வகையிலான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சகல மாணவர்களும் ஒரு விளையாட்டு மற்றும் ஒரு இணைப் பாடவிதான/ மேலதிக பாடவிதான செயற்பாட்டிலேனும் ஈடுபடுவதன் முக்கியத்துவம் தொடர்பாக அறியப்படுத்துதல்.

8. மாணவர்களது போஷணைத் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் விலை உயர்ந்த மற்றும் குறைந்தளவிலான போசணை கொண்ட சிற்றுண்டிகளுக்குப் பதிலாக குறைந்த செலவில் போஷாக்குடன் கூடிய உணவு வகைகளை வழங்குமாறு அறியப்படுத்துதல்.

9. பாடசாலை வளாகத்தின் தூய்மை மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வீட்டுச் சூழலை சுத்தமாக பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

10. விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவர்களது பெற்றோரை அறியப்படுத்துதல் மற்றும் விசேட திறமைகளுடன் கூடிய மாணவர்களுக்கு அவர்களது திறமைகளை மேலும் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களது பெற்றோரை அறியப்படுத்துதல்.

11. சகல மாணவர்களும் விசேடமானவர்கள் என்பதையும், மாணவர்கள் ஒருவருடன் ஒருவரை ஒப்பிடுவதன் மூலம் அவர்களது ஆளுமை விருத்தியில் அது பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பதனால் பிள்ளைகளது உளவியல் மற்றும் உடலியல் விருத்தித் தேவைகள் தொடர்பான புரிதலுடன் கூடியதாக அவர்களுடன் நெருக்கமாக செயற்படவேண்டும் என்பதாக பெற்றோரை அறியப்படுத்துதல்.

வசந்தா பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு